# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### NCGG - SLIDA புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழான முதலாவது திறன்விருத்தி நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக நிறைவு

இலங்கை ஜனாதிபதி அதிமேதகு அநுர குமார திசாநாயக்க அவர்கள் 2024 டிசம்பரில் இந்தியாவிற்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின் போது ஐந்து வருட காலப்பகுதியில் இலங்கை சிவில் சேவை அதிகாரிகள் 1500 பேருக்கு பயிற்சி மற்றும் திறன் விருத்தி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக இந்திய நல்லாட்சிக்கான தேசிய மையம் (NCGG) மற்றும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் (SLIDA) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

2. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழான முதல் பயிற்சி திட்டம் NCGG இல் 2025 ஏப்ரல் 21 முதல் 2025 மே 02, வரை வெற்றிகரமாக நடைபெற்றதுடன் இதில் 41 அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர். இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையின் அடிப்படையில், இந்த திட்டத்தின் தொனிப்பொருள் 'ஆட்சியில் டிஜிட்டல் மயமாக்கல்' என தீர்மானிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சி திட்டத்தில் டிஜிட்டல் சேவை வழங்கல், டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பு, டிஜிட்டல் கொடுப்பனவுகள் மூலமான நிதி உள்ளடக்கம் மற்றும் பொதுமக்கள் குறை நிவர்த்தி முறைமைகளில் புதுமைகள் போன்ற முக்கிய பகுதிகளை மையமாகக் கொண்ட தொடர் அமர்வுகள் இடம்பெற்றன. அத்துடன் ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் மிஷன் e-Office, GeM,, ஆதார், பிரதமர் கதி சக்தி உள்ளிட்ட டிஜிட்டல் துறையில் இந்தியாவின் ஏனைய முதன்மையான முன்முயற்சிகள் குறித்து சிரேஸ்ட அதிகாரிகள் மற்றும் துறைசார்ந்த நிபுணர்கள் விளக்கவுரைகளை வழங்கினர்.

3.. இந்நிலையில் இத்திட்டத்தில் பங்கேற்றவர்களுடன் 2025 மே 08 ஆம் திகதி SLIDA-வில் ஏற்பாடு செய்யப்பட்ட உரையாடல் அமர்வில், இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள், இரு நாடுகளுக்கும் இடையிலான அபிவிருத்தி ஒத்துழைப்பின் ஒரு முக்கிய தூண் திறன்விருத்தி என்று குறிப்பிட்டதுடன் இந்தியா வழங்கும் புலமைப் பரிசில்கள் மற்றும் திறன் விருத்தி பயிற்சிகளால் மிகப்பெரியளவில் நன்மையடையும் நாடுகளில் இலங்கையும் ஒன்று எனவும் சுட்டிக்காட்டினார். இலங்கையர்களுக்கான திறன் மேம்பாட்டு வாய்ப்புகளை மேம்படுத்துவதில் இந்தியாவின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டை நிரூபிக்கும் வகையில், இந்தியப் பிரதமர் தனது அண்மைய விஜயத்தின் போது ஆண்டுதோறும் மேலதிகமாக 700 இலங்கையர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதற்கான முடிவினை அறிவித்துள்ளார் என்பதையும் அவர் எடுத்துரைத்தார். இவ்வாறான அடிப்படையில், NCGG-SLIDA நிகழ்ச்சித் திட்டத்தில்

பயிற்சிபெறும் முதல் தொகுதி பங்கேற்பாளர்கள் ஆண்டுதோறும் 1000 இலங்கையர்களுக்கு பயனளிக்கும் இந்தியாவின் மேம்படுத்தப்பட்ட திறன் மேம்பாட்டு முயற்சியின் ஒரு பகுதியாக பயிற்சி பெறும் முதல் இலங்கையர் குழுவையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாக உயர் ஸ்தானிகர் கூறினார்.

4. இந்த கலந்துரையாடலில் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திரு. எஸ். அலோக பண்டார; SLIDA பணிப்பாளர் நாயகம் திரு. ஏ.வி. ஜனதார; SLIDA சிரேஸ்ட அதிகாரிகள் மற்றும் கல்விசார் ஊழியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

5. NCGG-SLIDA திட்டத்தில் பங்கேற்பாளர்களிடமிருந்து கிடைத்த மிகவும் நேர்மறையான பின்னூட்டத்தின் அடிப்படையிலும் SLIDA கோரிக்கையின்பேரிலும் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் அதே கருப்பொருளில் இரண்டாவது செயல்திட்டம் ஜூன் 2025 ஆரம்பத்தில் முன்னெடுக்கப்படவுள்ளதுடன் சுமார் 40 அதிகாரிகளைக் கொண்ட மற்றொரு குழுவினரை இலக்காகக்கொண்டு திட்டமிடப்பட்டுள்ளது.

**********

**கொழும்பு**
**2025 மே 09**